# ஒன்றிய பா.ஜ.க. அரசு - தேர்தல் நேரத்தில் மக்களிடம் குழப்பத்தையும், அச்சத்தையும் உருவாக்குகிறது!

இந்தியாவில் எப்படியாவது சர்வாதிகாரத்தாலும் ஆணவத்தாலும் அடக்குமுறையாலும் எதிர்க்கட்சிகளை அடக்கி ஆர்.எஸ்.எஸ். மூலம் செயல்பட்டு "யார் என்ன சொன்னாலும் அதைப்பற்றி எல்லாம் எங்களுக்கு கவலை இல்லை. நாங்கள் மீண்டும் எப்படியாவது ஒரு முறை மீண்டும் இந்தியாவை ஆள வேண்டும் அதற்கு மக்களை எந்த விலை கொடுத்தாவது வாங்குவதற்கு தயாராக இருக்கிறோம்" என்ற நிலைப்பாட்டோடு பி.ஜே.பி. உச்சகட்ட செயலில் இறங்கிவிட்டது.

அதனால் தான் இந்தியா முழுவதும் ஒவ்வொரு மாநிலமாக எந்தெந்த கட்சிகள் பி.ஜே.பி.யை எதிர்க்கிறதோ எதிர்த்து குரல் கொடுக்கிறதோ எதிர்த்து செயல் படுகிறதோ, எதிர்ப்பை மக்களிடம் எடுத்துச் செல்கிறதோ, அந்த கட்சிகளை உடைப்பது, எம்.எல்.ஏ.க்களை பணம் கொடுத்து விலைக்கு வாங்குவது;

எந்த மாநிலத்தில் ஆளும் ஆட்சியினர் தங்களை எதிர்க்கிறார்களோ, தங்களுக்கு துணை போகாமல் செயல்படுகிறார்களோ, அந்த ஆட்சிக்கு அந்த முதலமைச்சருக்கு அமைச்சர்களுக்கு செயல்படுபவர்களுக்கு தேவையில்லாமல் இவர்கள் சி.பி.ஐ. சோதனை, வருமானவரித்துறை சோதனை அமலாக்கத்துறை சோதனை, துறை ரீதியாக அமைச்சருடைய செயல்பாடுகளில் இவர்கள் புகுந்து கொண்டு செயல்படுவது; இதுவரை அரசியல் வரலாற்றில் ஒரு நாளும் நடந்ததில்லை. சுதந்திரம் வாங்கிய பிறகு இப்பொழுது தான் இந்த பி.ஜே.பி. ஆட்சியில் தான் இவ்வளவு சர்வாதிகாரமான போக்கோடு செயல்படுகிறார்கள்.

இந்த நிலைப்பாட்டை, இதை தட்டிக்கேட்பதற்கு யாரும் இல்லை என்று நினைக்கிறார்கள். அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்து செயல்பட ஆரம்பித்து தேர்தலை சந்தித்து விடுவார்கள் என்கிற பயத்தில் தான் இப்பொழுது எல்லா மாநிலங்களிலும் எதிர்நிலைப்பாட்டை கையில் எடுத்திருக்கிறார்கள். முழுமையாக குடியரசுத் தலைவர் அவர்களை புறக்கணித்துவிட்டு நாடாளுமன்றத்தை திறக்கும் இந்த நிலையை ஒட்டுமொத்த இந்தியாவில் வாழ்கிற 140 கோடி மக்களும் வேதனையோடு பார்க்கிறார்கள். இந்தியா ஜனநாயக நாடு; தனியாக ஒரு மதத்துக்காக மட்டும் இருக்கிற நாடு அல்ல. எல்லா மக்களும் ஒன்றிணைந்து வாழ்கிறோம். இந்த நிலையில் தனிப்பட்ட முறையில் நாடாளு மன்றத்தில் செங்கோல் என்று வைத்து இப்பொழுது ஒரு மதவாத கட்சி என்பதனை பகிரங்கப்படுத்தி இருக்கிற பி.ஜே.பி. தேர்தல் நேரத்தில் ஏதாவது ஒரு குழப்பத்தை ஏற்படுத்தி மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தி மீண்டும் ஆட்சிக்கு வர வேண்டும் என்கிற நிலையில் அயோத்தியில் கோயில் கட்டுவதை வேகப்படுத்தி உள்ளார்கள் மற்றும் எந்த நேரத்தில் என்ன செய்வார்களோ என்ற அச்சத்தில் பயத்தில் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

நாட்டில் ஜனநாயகம் கேள்விக்கூத்து டன் தலைவிரித்தாடுகிறது. வருமானவரித்துறை என்பது ஒன்றிய அரசினுடைய துறை. தமிழ்நாட்டில் உள்ள பி.ஜே.பி. தலைவர் அண்ணாமலை வருமான வரித்துறைஅதிகாரியா? அல்லதுஒன்றியஅரசில்பணியாற்றுகிறாரா? ஒன்றிய அரசினுடைய ஏஜென்ட்டா? ஒன்றுமே இல்லை. ஒரு கட்சித் தலைவர் அரசு செயல்பாட்டை விமர்சித்து பேட்டி கொடுப்பது, கருத்து சொல்லுவது கேவலமாக இருக்கிறது. இவர் 10 நாட்களுக்கு முன்பு வருமானவரித்துறை ரெய்டு வரும் என்றெல்லாம் சொன்னார். இவருக்கு யார் தகவல் கொடுத்தது? ஒன்றிய அரசு தமிழ்நாட்டில் செயல்படுவது அண்ணாமலையின் கட்டுப்பாட்டிலா? அண்ணா மலை சொல்லுவதை கேட்டு செயல்படுகிற வருமானவரித்துறை அதிகாரிகள்தனியாகஇருக்கிறார்களாஎன்பதைவருமானவரித்துறை தலைமை அலுவலகம் பதில் சொல்ல வேண்டும்.

அண்ணாமலைக்கு யார் வருமான வரித்துறை அலுவலகத்தைப் பற்றி பேசுவதற்கு அதிகாரம் கொடுத்தார்கள் என்பதை தெரிவிக்க வேண்டும். அமலாக்க துறைக்கும் பதில் சொல்கிறார். தமிழக ஆளுநரை பற்றி யார் பேசினாலும் அதற்கு ஆளுநர் மாளிகை பதில் சொல்வதை விட அண்ணாமலை பதில் சொல்வது தான் அதிகம். இவர் என்ன ஆளுநர் மாளிகையின் செய்தி தொடர்பாளரா? ஒன்றிய அரசின் செய்தி தொடர்பாளரா? எதற்கெடுத்தாலும் அரசு செயல்பாட்டில் பதில் சொல்வதற்கு அண்ணாமலைக்கு என்ன தகுதி இருக்கிறது?



**கோவை கே.செல்வராஜ்**
முன்னாள் எம்.எல்.ஏ
கழக செய்தி தொடர்பு துணைச் செயலாளர்

நாடு முழுவதும் மக்கள் எழுச்சியோடு போராடியதும் 1947 ஆகஸ்ட் 15-ஆம் தேதி சுதந்திர இந்தியாவை பெறுவதற்கு போராடியது போல் இப்பொழுது இந்திய நாட்டில் சர்வாதிகாரத்தை கையில் எடுத்துக்கொண்டு மக்கள் விரோத சக்தியாக செயல்படும் பாரதிய ஜனதா கட்சியை 2024 தேர்தலில் முறியடிப்பதற்கு ஒட்டுமொத்த இந்திய மக்களின் ஆதரவை பெற்று அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்து செயல்படுவதற்கு முடிவெடுத்து ஜீன் இருபத்து மூன்றாம் தேதி பீகார் மாநில தலைநகர் பாட்னாவில் பீகார் மாநில முதல்வர் நிதிஷ் குமார் அவர்கள் ஏற்பாடு செய்த வரலாற்றுச் சிறப்புமிக்க அனைத்து கட்சி கூட்டத்தில்

மக்களாட்சி தத்துவத்தை கட்டிக் காக்கின்ற அனைத்து கட்சி தலைவர்கள் ஒன்றிணைந்து கூட்டம் நடத்தியது மாபெரும் மக்கள் சக்தியாக எல்லா மாநிலங்களிலும் முழு ஒத்துழைப்போடு அனைத்து கட்சிகளும் ஒருங்கிணைந்து வரும் நாடாளுமன்றத் தேர்தலை சந்திப்பது என்றும்; ஒருமனதாக கட்சி தலைவர்கள், கருத்து வேறுபாடுகள் மறந்து ஒன்றுபட்டு கூடி முடிவெடுத்து இருப்பதை ஒட்டுமொத்த இந்திய மக்களும் மகிழ்ச்சியோடு வரவேற்கிறார்கள்.

இந்தியா முழுவதும் பி.ஜே.பி. ஆட்சிக்கு வந்ததிலிருந்து மக்களாட்சித் தத்துவத்திற்கு விரோதமாக, இந்திய அரசியலமைப்புச் சட்டத்துக்கு விரோதமாக, மாநில அரசுகளின் உரிமையை பறிக்கின்ற விதத்திலும் மக்களின் அடிப்படை உரிமைகளான உணவு வினியோகத்தை ஒன்றிய அரசு கையில் எடுத்துக் கொண்டது. உணவு விநியோக நியாய விலைகடைகளின் மக்கள் வாங்கும் அரிசி பருப்பு, கோதுமை மாவு, எண்ணெய் பொருள்களுக்கும் ஜி.எஸ்.டி. வரியை விதித்து மாநில அரசுகள் மக்களுக்கு குறைந்த விலையில் வழங்குவதை தடுத்து, பல லட்சம் டன் அரிசி, கோதுமை ஒன்றிய அரசு கை இருப்பில் இருந்தாலும் நியாய விலைக் கடைகளுக்கு வழங்குவதற்கு கொடுக்காமல் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிற கம்பெனிகளுக்கு விற்பனை செய்ய நடைமுறைப்படுத்துவதற்கு தயாராகி விட்டது. மின்சார துறையில் மக்களுக்கு அதிகப்படியான சுமையை கட்டணத்தை அதிகப்படுத்துகிறது. தொடர்ந்து மக்கள் விரோத ஒன்றிய அரசு செயல்படுவதை தடுக்க ஒட்டுமொத்தமாக அனைத்து கட்சிகளும் இணைந்து செயல்படும்.

2014 வரை 450 ரூபாய்க்கு இருந்த எரிவாய் உருளை கேஸ் சிலிண்டர் விலை பெட்ரோல் 55 ரூபாயும், டீசல் 45 ரூபாய் ஒரு லிட்டர் விலை விற்பனை செய்து வந்தது காங்கிரஸ் கூட்டணி அரசு. 2014 பி.ஜே.பி. ஆட்சிக்கு வந்ததும் இப்பொழுது டீசல் 95 ரூபாயும் பெட்ரோல் 105 ரூபாயும் விற்பனை செய்கிறது. 2 மடங்கு விலையை உயர்த்திருக்கிறது. கேஸ் சிலிண்டர் 1,150 ரூபாய்க்கு விற்கிறது. பி.ஜே.பி. அரசு உலக நாடு முழுவதும் டீசல், பெட்ரோல் உற்பத்தி செய்கிற நாடுகள் உட்பட கச்சா எண்ணெய் விலை இப்பொழுது 40% குறைந்து கூட ஒரு ரூபாய் கூட குறைக்காமல் லாப நோக்க அடிப்படையில் பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய், கேஸ் சிலிண்டர் ஆகியவற்றை ஒன்றிய அரசு ஏதோ கார்ப்பரேட் கம்பெனிகள் லாபத்துக்கு நடத்துவதுபோல் இந்திய நாட்டு மக்களுக்கு குறைந்த விலையில் மானிய விலையில் வழங்கி வந்த டீசல், பெட்ரோல் கேஸ் சிலிண்டர் எல்லாவற்றுடையும் லாப விலைகளில் வெளி மார்க்கெட்டில் விற்பனை செய்பவர்கள் போல லாப அடிப்படையில் செயல்படுகிறது. இன்றைக்கு ஒன்றிய அரசு விற்பனை செய்து வருகிறது.

இது போன்ற மக்கள் விரோத செயல்பாடுகளும் பி.ஜே.பி. ஆட்சி புரியாத மாநிலங்களில் ஆளுகிற மற்ற கட்சிகளை அகற்றுவதற்கும், எதிர்த்து செயல்படுவதற்கும், அங்கு சட்ட விரோத நடவடிக்கைகளை எடுத்து அமைச்சர்களை, எம்.எல்.ஏ.க்கள், எம்.பி.க்களை அச்சுறுத்துவது சட்டவிரோதமாக மக்களாட்சி விரோதமாக நடவடிக்கை எடுப்பது இது போன்ற நிலைப்பாடுகளை எல்லாம் அடக்குவதற்கும், ஒடுக்குவதற்கும் மக்களை வஞ்சிக்கிற ஆட்சி பி.ஜே.பி. என்கிற கட்சி இந்தியாவில் இனிமேல் எப்பொழுதும் வரக்கூடாது என்பதற்காக அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்து நம்முடைய தமிழக முதல்வர் கழகத் தலைவர் அண்ணன் தளபதி அவர்களும் கலந்துகொண்டு வீர உரை நிகழ்த்தியதும், கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்களும், காங்கிரஸ் தலைவர்களும் திரிணாமூல் காங்கிரஸ் தலைவரும், ஜனதா தள தலைவர்களும், எல்லா கட்சிகளும் ஒன்றிணைந்து எடுத்திருக்கிற நல்ல முடிவு ஒட்டுமொத்த இந்திய மக்களுக்கு முழு நம்பிக்கையை கொடுத்து இருக்கிறது.

மாதத்திற்கு ஒரு முறை வானொலியில் பேசுகிற பிரதமர் நரேந்திர மோடி இவ்வளவு விஞ்ஞான பூர்வமாக இந்திய நாடு வளர்ந்தும் ஒட்டுமொத்த இளைஞர்கள் எழுச்சியோடு படிப்பறிவில் விஞ்ஞானத்தில் பொருளாதாரத்தில் முன்னேற வேண்டிய நிலைப்பாட்டில் இன்னும் இந்திய மக்களை ஒரு தொலைக்காட்சியில் கூட பார்ப்பதற்கு இல்லாமல் வானொலியிலே பேசுவதை ஒவ்வொரு மாதமும் கேட்கிறார்கள் என்றால் எந்த அளவுக்கு இந்தியாவில் மக்கள் முன்னேறி இருக்கிறார்கள். முன்னேற்றம் இல்லாத ஒரு அப்பாவி மக்களை இன்னும் வானொலியில் பேசுவதை கேட்கிற நிலையில் ஏழ்மையில் இருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கின்ற பொழுது மிகவும் பின்தங்கிய நிலையில் அந்த மக்கள் இருந்தால் தான் நம்மை ஏற்றுக்கொண்டிருப்பார்கள். வளர்ந்துவிட்டால், உயர்ந்துவிட்டால் நம்மை நம்பாமல் எதிர்க்க தயாராகி விடுவார்கள் என்ற நிலையில் இன்றைக்கு கிராமப்புற மக்களை ஏழ்மையிலேயே இருக்க வைத்திருக்கிறது பி.ஜே.பி. என்பது இந்த வானொலி உரையின் மூலமாக வெட்ட வெளிச்சத்துக்கு வருகிறது. நம்முடைய முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் செயல்பாட்டை ஒட்டுமொத்த தமிழ் மக்களும் வரவேற்கிறார்கள். உலகம் முழுவதும் வாழுகிற தமிழக மக்கள் கழகத் தலைவர் அவர்களின் நடவடிக்கையை உற்றுப் பார்த்து முழு ஆதரவு தெரிவிக்கிறார்கள். கார்ப்பரேட் கம்பெனிகளுக்கு உதவுகிற பி.ஜே.பி. அரசை சிறு குறு நடுத்தர தொழில் செய்பவர்கள் தங்களுக்கு முழுமையாக எதிர்காலத்தை அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்து ஆட்சி அமைத்து செயல்படுத்துவார்கள் என்பதை உரிமையோடு நம்பிக்கையோடு இருக்கிறார்கள். அனைத்து தரப்பு மக்களின் ஆதரவோடு இந்த அனைத்து கட்சியின் ஒன்றிணைந்த செயல்பாடு இரண்டாவது சுதந்திரப் போராட்டம் என்கிற நிலைப்பாட்டில் இந்த வெற்றி அமையும் மக்கள் சுதந்திரமாக வாழ 2024 மாபெரும் வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியை மக்கள் வழங்குவார்கள் நிச்சயம் நடந்தே தீரும்.

இவர்களும் இந்த ஒன்றிய அரசு வருமானவரித்துறை பொருளாதார அமலாக்கத்துறை சி.பி.ஐ. போன்ற தன்னுடைய அதிகாரத்தில் உள்ள துறையை ஏவிவிட்டு மாநில அமைச்சர்களாக இருப்பவர்களின் அவர்களது உறவினர்கள், நண்பர்கள் வீடுகளுக்கு சென்று சோதனை என்ற பெயரில் அச்சுறுத்துவதும், தொடர்ந்து புதுடெல்லி அரசுக்கும், மேற்கு வங்காள அரசுக்கும் கொல்கத்தாவிலும் பீகாரில் லல்லு பிரசாத் யாதவ் அவர்களை சிறையில் அடைத்து கொடுமைப்படுத்தியதும் அந்த மாநில அமைச்சர்கள் மீது பி.ஜே.பி. குற்றச்சாட்டுகளை சித்தரித்து ஜோடித்து வழக்கு தொடுத்து சோதனை என்ற பெயரில் வருமானவரித்துறை, பொருளாதார குற்றப்புலனாய்வுத் துறை, சி.பி.ஐ. சோதனை, அமலாக்கத்துறை சோதனை செய்வதும், அமைச்சர்களையும், ஒரு துணை முதல மைச்சரையும் கைது செய்து சிறையில் அடைப்பது, துன்புறுத்துவது எந்த விதத்தில் நியாயம்? இதுவரை இந்தியாவில் நாடாளுமன்றத் தேர்தலுக்கும், சட்டமன்றத் தேர்தலுக்கும் வாக்களிப்பது மக்கள்தான். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுதான் இந்த மாநில அரசுகள்; அவர்களுக்கு விருப்பமான, விரும்புகிற, அவர்களுக்கு உழைப்பவர்கள் யார் என்று தெரிந்து விரும்பி தேர்ந்தெடுத்த கட்சி ஆட்சி அமைக்கும் பொழுது அதை அழிப்பதற்கு, அடக்குவதற்கு, ஒழிப்பதற்கு, கடுமையான சோதனைகளை, தொல்லைகளை கொடுப்பதும் நியாயமா? மாநில ஆளுநர்கள் மூலமாக விமர்சனங்கள் செய்வதும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு எதிராக நியமன கவர்னர் ஒரு அரசு போல் பி.ஜே.பி. தலை வர்களை வாரா வாரம் அழைத்துப் பேசி செயல்பட்டுக் கொண்டிருப்பது ஜனநாயக படுகொலை. இந்திய அரசியல் வரலாற்றில் சர்வாதிகாரம் வென்றது கிடையாது. அகம் பாவத்தோடு, ஆணவத்தோடு, அதிகார துஷ்பிரயோகம் செய்த ஆட்சி நிலைத்தது கிடையாது. மாநில அரசுகளை செயல்பட விடாமல் செய்வதும் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற முடியாமல் இருப்பதற்கு முழு காரணம் ஒன்றிய அரசின் அடக்குமுறை தான்.

இந்தியா முழுவதும் எவ்வளவு வேதனையும் சிரமத்தையும் தாங்கிக் கொண்டு குடும்பப் பெண்கள் வாழ்கிறார்கள் என்பதை பி.ஜே.பி. ஒன்றிய அரசு பார்க்க மறந்துவிட்டது. ஒவ்வொரு கேஸ் சிலிண்டர் வாங்கும் பொழுதும் அதற்குரிய மானியத்தை உங்களுக்கு உங்கள் வங்கி கணக்கில் செலுத்துவோம் என்று கூறிய பி.ஜே.பி. ஒன்றிய அரசு இதுவரை எத்தனை பேருக்கு வங்கி கணக்கு மானியம் கொடுத்தது என்பதனை பார்க்க வேண்டும். 450 ரூபாய்க்கு விற்ற எரிவாயு சிலிண்டர் 1,150 ரூபாய்க்கு இப்பொழுது விற்கப்படுகிறது. இந்த 700 ரூபாய் விலை ஏற்றத்தை நீங்கள் குறைத்தாலே போதும் முன்பு இருந்த ஒன்றிய அரசுகள் எரிவாயு சிலிண்டருக்கு விலை ஏற்றுவதாக இருந்தால் அதற்கு அந்த ஏறுகிற விலைக்கான தொகையை மானியமாக எண்ணெய் கம்பெனிகளுக்கு கொடுத்து வந்தது.

அதனால் எரிவாயு சிலிண்டர் விலை ஏறாமல் இருந்தது. பி.ஜே.பி. ஒன்றிய அரசு ஆட்சிக்கு வந்ததும் இரண்டே வருடத்தில் ஆயிரம் ரூபாய்க்கு எரிவாயு சிலிண்டரை ஏற்றி, இப்பொழுது 1,150 ரூபாய்க்கு கொடுக்கப்படுகிறது. உலகம் முழுவதும் கச்சா எண்ணைக்கும், எரிவாயு கேஸ்க்கும் விலை குறைந்திருக் கிறது. உலக அளவில் ஒரு பேரலுக்கு 60 டாலர் குறைந்திருக்கிறது.

ஆனால் விலை மட்டும் குறையவில்லை. இதை சுமார் 70 கோடி குடும்ப பெண்களும், இந்த விலை ஏற்றத்தால் தான் சிரமப்பட்டு குடும்பம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். டீசல், கேஸ் சிலிண்டர், பெட்ரோல் விலை ஏற்றத்தின் மூலம் குடும்பத்தில் மாதம் 5,000 ரூபாய் செலவு அதிகமாகிறது. டீசல், பெட்ரோலுக்கு மானியம் கொடுப்பதாக சொன்னீர்கள். இதுவரை எந்த பெட்ரோல் பங்கில் டீசல் பெட்ரோல் வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு இரு சக்கர வாகனத்திற்கு கார்களுக்கு பணம் கொடுக்கின்ற பொழுது வங்கி கணக்கு பெற்று ஆதார் கணக்கை பெற்று ஒரு நாளாவது ஒரு ரூபாயாவது எந்த வாடிக்கையாளருக்காவது மானியம் கொடுக்கப்பட்டிருக்கிறதா ஒன்றிய அரசு? மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய அரசினுடைய அமைச்சர்களுக்கு என்ன உரிமை இருக்கிறதோ, அத்தனை உரிமைகளும் மாநில அமைச்சர்களுக்கும் உண்டு. எதற்காக இழிவுபடுத்தி அவர்களை கேவலப்படுத்துகிற விதத்தில் இப்படிப்பட்ட செயல்பாடுகளை ஒன்றிய அரசு செய்வது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

சுதந்திரம் வாங்கிய பிறகு எந்த ஒரு ஒன்றிய அரசும் இதுபோல் அரசியல் ரீதியாக பழிவாங்குகிற, தொல்லை கொடுக்கிற, இழிவாக நடந்து கொள்கிற செயலை செய்தது கிடையாது. ஒட்டுமொத்த தமிழக மக்களும் 2024 தேர்தலில் பி.ஜே.பி. செய்கிற, இந்த சதி வேலைகளை முறியடிக்கிற விதத்தில் மக்கள் முடிவு இருக்கும்.

சந்தை கடையில் கூறு போட்டு காய்கறிகள் விற்பதைப்போல் ஒரு கட்சி கூறு போட்டு விற்றுக்கொண்டிருக்கிறது. நடக்கவே முடியாத இவர்கள் மரத்தில் இருக்கும் தேன் கூட்டை பிரித்து எடுத்து வருவேன் என்று கூறுகிற உதாரணம் தான் இந்த கட்சிக்கு உதாரணம். அந்தக் கட்சியின் முன்னாள் தலைவர் கூறினார். நான் உயிரோடு இருக்கிற வரை இனிமேல் பி.ஜே.பி.யோடு ஒட்டும் இல்லை, உறவும் இல்லை. ஒரு நாளும் சேர மாட்டேன். அவர்களோடு சேர்ந்து அழிந்தது போதும் என்று பகிரங்கமாக கூறினார். அந்த தலைவரின் உறுதியான முடிவை காற்றிலே பறக்க விட்டு செயல்பட்டுக் கொண்டிருக்கும் கேவலமான இவர்கள் அந்த அம்மையாருடைய பெயரை சொல்லுவதற்கு தகுதி இல்லாதவர்கள். தமிழகத்தில் பல கோடி ஊழல் செய்து சேர்த்து வைத்த பணத்தை பாதுகாப்பதற்கு சண்டை போட்டுக்கொண்டிருக்கிற இவர்கள் ஒன்றிய பி.ஜே.பி. யோடு கைகோர்த்து தங்களை தண்டனைகளில் இருந்து காப்பாற்றிக் கொள்ள நினைக்கிறார்கள். இவர்கள் செய்த அந்த ஊழலில் இருந்து ஒரு நாளும் தப்பிக்க முடியாது. தமிழகத்தில் மக்களுக்கு விரோதமாக செயல்படும் இவர்களை மக்களே வாக்குகள் மூலம் தண்டிப்பார்கள்.

அ.தி.மு.க.-பி.ஜே.பி. ஒன்று சேர்ந்தாலும் சரி, பி.ஜே.பி.-அ.தி.மு.க.வோடு சேர்ந்தாலும் சரி; சேராவிட்டாலும் சரி; எத்தனை லெட்டர் பேடு கட்சிகளை நீங்கள் சேர்த்துக் கொண்டாலும், எந்த தேர்தலிலும் தமிழ்நாட்டில் உங்களை மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள், நம்ப மாட்டார்கள். உங்களைப் போன்ற கேவலமான, இழிவான செயல்பாடுடைய அத்துணை பேரையும் தமிழக மக்கள் வரலாற்றில் இல்லாமல் செய்து விடுவார்கள். அதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். இது போன்ற அச்சுறுத்தும் செயல்களை எல்லாம் எத்தனையோ விதமாக சந்தித்த கட்சி தான் தி.மு.க.

1975-ல் இருந்து 77 வரை இந்த இரண்டு ஆண்டுகளில் எத்தனையோ அடக்குமுறைகளை ஏவிவிட்டதை எல்லாம் தாங்கிக்கொண்டு மக்கள் செல்வாக்கோடு இயங்கிக் கொண்டிருக்கும் இயக்கம் தான் தி.மு.க. ஜனநாயக ரீதியில் செயல்பட வேண்டிய ஒன்றிய அரசு சர்வாதிகார போக்கில் செயல்படுவது கண்டிக்கத்தக்கது. இதுபோன்ற எதிர்ப்புகளை கண்டு அஞ்சாமல் ஒட்டுமொத்த தமிழ் மக்களும் வீறு கொண்டு எழுந்தால், தமிழகத்தில் அடையாளம் தெரியாத இடத்திற்கு பி.ஜே.பி. சென்று விடும். உங்களோடு சேர்ந்து கூப்பாடு போடுபவர்களும் சென்று விடுவார்கள். இது நல்ல மரபு அல்ல என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

## அவிநாசியில் மேல்நிலை நீர்தேக்கப்பெட்டி!

திருப்பூர், ஜூலை 1-

திருப்பூர் வடக்கு மாவட்டம், அவிநாசி சட்ட மன்றத் தொகுதிக்குட்பட்ட திருமுருகன் பூண்டி ஒன்றியம், கருவலூர் ஊராட்சி அண்ணா நகரில் ஜல் ஜீவன் திட்டத்தில் ரூ.12 இலட்சம் மதிப்பில் மேல்நிலை தொட்டி அமைக்கும் பணியினை திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர், வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.செல்வராஜ் முன்னிலையில் கழக துணை பொதுச் செயலாளர், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர், ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஆ.ராசா தொடங்கி வைத்தார். இதில் மாவட்ட, மாநகர, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர் கள் பலர் கலந்து கொண்டனர்.



திருப்பூர் காதர்பேட்டை பனியன் பஜாரில் தீவிபத்தில் பாதிக்கப்பட்ட 51 கடைகளின் உரிமையாளர்களுக்கு ஆறுதலாக தனது சொந்த நிதியிலிருந்து ஒரு கடைக்கு 50 ஆயிரம் வீதம் 51 கடைகளுக்கு 25 இலட்சத்து 50 ஆயிரம் ரொக்க பணத்தை திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர், வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.செல்வராஜ் வழங்கினார். இதில் திருப்பூர் தெற்கு மாநகரக் கழகச் செயலாளர் டி.கே.டி.மு.நாகராசன், மாநகராட்சி துணை ரா.பாலசுப்பிரமணியன் உள்பட மாவட்ட, மாநகர, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### க.செல்வராஜ் எம்.எல்.ஏ., முன்னிலையில்

## அவிநாசி ஒன்றியப் பகுதிகளில் ரூ.2.16 கோடி மதிப்பிலான திட்டப் பணிகள்!

### கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி. தொடங்கி வைத்தார்!

திருப்பூர், ஜூலை 01-

திருப்பூர் வடக்கு மாவட்டம், அவிநாசி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் ரூ.2 கோடியே 16 இலட்சத்து 59 ஆயிரம் மதிப்பிலான வளர்ச்சி திட்டப்பணிகளை திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர், வடக்கு மாவட்டக் கழக செயலாளர் க.செல்வராஜ் முன்னிலையில் கழக துணை பொதுச் செயலாளர் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர், ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஆ.ராசா எம்.பி., தொடங்கி வைத்தார்.

திருப்பூர் வடக்கு மாவட்டம், அவிநாசி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருமுருகன்பூண்டி ஒன்றியம், கருவலூர் ஊராட்சி அண்ணா நகரில் ஜல் ஜீவன் திட்டத்தில் ரூ.12 இலட்சம் மதிப்பில் மேல்நிலை தொட்டி அமைக்கும் பணி, முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2022 - 2023வேலாயுதம் பாளையம் ஊராட்சியில் பல்லடம், அவிநாசி சாலை முதல் காசிகவுண்டர்புதூர் (வழி) ஆதிதிராவிடர் காலனி வரை ரூ.15.17 இலட்சம் மதிப்பில் தார் சாலை அமைக்கும் பணி, பல்லடம், அவிநாசி சாலை முதல் வேலாயுதம் பாளையம் (வழி) ராயன்கோயில் காலனி பட்டறை வரை ரூ.74.17 லட்சம் மதிப்பில் தார் சாலை அமைக்கும் பணி, அவிநாசி ஒன்றியம், செம்பியநல்லூர் ஊராட்சி சாலையப்பாளையம் முதல் செம்பாக்கவுண்டன் பாளையம் (வழி) எஸ்.மேட்டுப்பாளையம் பட்டறை வரை ரூ.49.97 லட்சம் மதிப்பில் சாலை அமைக்கும் பணி, சேவூர் ஒன்றியம், அவிநாசி புளியம்பட்டி சாலை முதல் மங்கரசுவலைய பாளையம் வரை ரூ.65.28 லட்சம் மதிப்பில் சாலை அமைக்கும் பணி என மொத்தம் ரூ.2 கோடியே 16 இலட்சத்து 59 ஆயிரம் மதிப்பிலான வளர்ச்சி திட்டப்பணிகளை திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர் க.செல்வராஜ் முன்னிலையில் கழக துணை பொதுச் செயலாளர் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர், ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஆ.ராசா எம்.பி., தொடங்கி வைத்தார்.

இதில் மாவட்டக் கழக அவைத்தலைவர் க.நடராஜன், திருப்பூர் வடக்கு மாநகர அவைத்தலைவர் க.ஈஸ்வரமூர்த்தி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் சரவணன் நம்பி, ஒன்றிய கழக செயலாளர்கள் எஸ்.ஆர். பழனிச்சாமி திருமுருகன் பூண்டி, ஈ.ப.சிவப்பிரகாஷ் அவிநாசி, க.பால்ராஜ் சேவூர், வாலிபாளையம் பகுதி கழகச் செயலாளர் மு.க.உசேன், பேரூர் கழக செயலாளர் திராவிடன் வசந்தகுமார், திருப்பூர் 22 வது வார்டு மாமன்ற உறுப்பினர் ராதாகிருஷ்ணன், மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் எல்.ஐ.சி அவினாசியப்பன், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் சு.செல்வரங்கம், மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் சு.பத்மநாபன், மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் மு.பார்த்திபன், மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர் செ.குப்புசாமி, ஊராட்சி மன்ற தலைவர்கள் சி.முருகன், சாந்தி வேலுச்சாமி, மாவட்ட பிரதிநிதி ராதாகிருஷ்ணன், ஒன்றிய கவுன்சிலர் சீனிவாசன், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் வரதராஜன், ஒன்றிய இளைஞர் அணி முன்னாள் அமைப்பாளர் அ.விக்னேஷ், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் விவேக், மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி முன்னாள் துணை ஒருங்கிணைப்பாளர் த.சந்தோஷ், குகநாதன், எஸ்.எம்.மூர்த்தி, எஸ்.பி. கார்த்திக் உள்பட ஒன்றிய கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



பொள்ளாச்சியில் நடைபெற்ற மதுக்கரை தி.மு.க. ஒன்றியச் செயலாளர் ஆர்.விஜயசேகரனின் இல்லத் திருமண வரவேற்பு விழாவில் கலந்து கொண்டு மணமக்களை பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.சண்முகசுந்தரம் எம்.பி., கோவை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் தளபதி முருகேசன், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைத் தலைவர் டாக்டர் மகேந்திரன், மாவட்டக் கழக அவைத் தலைவர் கே.வி. சுப்பிரமணியன், கழக தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் எம்.ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர் எஸ்.ஜெயக்குமார், பொள்ளாச்சி நகரச் செயலாளர் நவநீதகிருஷ்ணன், கிணத்துக்கடவு ஒன்றியச் செயலாளர் செந்தில்குமார், பொதுக்குழு உறுப்பினர் ஆச்சிபட்டி பாலு, கிணத்துக்கடவு நடராஜ், ஒத்தக்கால் மண்டபம் பேரூராட்சித் தலைவர் பிரியதர்ஷினி ராஜசேகர் உட்பட கழக நிர்வாகிகள் வாழ்த்தினர்.

## தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு பொறுப்பாளர் பட்டியல்!

9 ஆம் பக்கத் தொடர்ச்சி

### காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம்

**தலைவர் – எல்.டி.ஜார்ஜ்,** 1.103, மாதாகோவில்தெரு, வளர்புரம், திருபெரும்புதூர் வட்டம்-602 105. காஞ்சிபுரம் மாவட்டம்,

**துணைத் தலைவர் – என்.ஷாஜகான்,** 38, 4-வது குறுக்கு தெரு, ரங்கநாதபுரம், மேற்கு தாம்பரம், சென்னை, 600 045.

**அமைப்பாளர் – செ.ஆல்பர்ட்,** 231, எம்.ஐ.ஜி - என்.எச்.1, அம்பேத்கார் தெரு, மறைமலை நகர், செங்கல்பட்டு மாவட்டம் - 603 202.

**துணை அமைப்பாளர்கள் – ஆ.தீபக் சாமுவேல்,** 62, லஸ்கர் தெரு, ஆலந்தூர், சென்னை - 600 016, **ஜி.ஏ.ராயப்பா,** 24/2, விண்ணரசி தெரு, தர்காஸ்ட் அஞ்சல், நடுவீரப்பட்டு ஊராட்சி, காஞ்சிபுரம் மாவட்டம் - 600 132 **டி.ஆரோக்கியராஜ்,** 76/4-ஏ, வடக்கு வெள்ளி தெரு, புனித தோமையார் மலை, சென்னை - 600 016 **க.அல்தாபி உசேன்,** 4/2, ஜாபர் தெரு, செங்கல்பட்டு - 603 001 **ஏ.கிறிஸ்டோபர்,** 24 2-வது தெரு, முத்தையாஸ் ரெட்டி நகர், ஆதம்பாக்கம், சென்னை - 600 088 **ஐ. அலிசபர்,** 7/301, அறிஞர் அண்ணா தெரு, ஜெ.ஜெ. நகர், சிங்கப்பெருமாள் கோவில், செங்கல்பட்டு- 603 204 **பி.ஜாபர் அலி,** 1/289, மாரியம்மன் கோவில் தெரு, முகலிவாக்கம், சென்னை, 600 125.

### திருவண்ணாமலை தெற்கு மாவட்டம்

**தலைவர் – பா, கமால் பாஷா,** 2ஏ, அண்ணா நகர் முதல் தெரு, திருவண்ணாமலை

**துணைத் தலைவர் – எல்.காதர்,** எரும்பூண்டி கிராமம், கீழ்பென்னாத்தூர் வட்டம்.

**அமைப்பாளர்– எச்.சாதிக் பாஷா,** 64//4பி. தவளநாயக்கன்பேட்டை, செங்கம். திருவண்ணாமலை மாவட்டம்.

**துணை அமைப்பாளர்கள் – ராயல் தியாகு,** 13/2, மத்தலாங்குளத் தெரு, திருவண்ணாமலை, .**வி.ஜான்சன்,** 535, வி.எம்.தெரு, தானிப்படி கிராமம், தண்டராம்பட்டு வட்டம் **ஆர்.டி. இன்பராஜ்,** 41/9டி, சாரோன், திருவண்ணாமலை. **நியமத்துல்லா,** 282, மாரியம்மன் கோவில்தெரு, இறையூர் கிராமம், செங்கம் வட்டம், **வில்சன் ரஜினிகாந்த்,** 121, ஜெயம் இல்லம், மசூதி தெரு, துக்காப்பேட்டை, செங்கம்.

### திருவண்ணாமலை வடக்கு மாவட்டம்

**தலைவர் – எச். ஜலால்,** குளத்துமேட்டுத்தெரு, வந்தவாசி, திருவண்ணாமலை மாவட்டம்.

**துணைத் தலைவர் – அ.ப.ரசூல்,** 61/12, கோட்டைக்குள் முஸ்லீம் தெரு, வந்தவாசி, திருவண்ணாமலை மாவட்டம் 604 408

**அமைப்பாளர்– அப்சல் பாஷா,** நெ.29, ஷரீப் உசேன் தெரு, ஆரணி-632 301, திருவண்ணாமலை மாவட்டம்

**துணை அமைப்பாளர்கள் – முகமது உசேன்,** 13, பாண்டியன் தெரு, செய்யாறு திருவண்ணாமலை மாவட்டம், 604 407. **அயத் பாஷா,** 2 வது வார்டு, காதர்பாஷா தெரு, போளூர், திருவண்ணாமலை மாவட்டம். **சபீர் பாஷா,** மாரியம்மன் கோவில் தெரு, சேத்துப்பட்டு, திருவண்ணாமலை மாவட்டம். **பி.எஸ்.சிவாஜி,** அருண் தேட்டர் பின்புறம், வசந்தம் நகர், போளூர், திருவண்ணாமலை மாவட்டம், **அன்வர் பாஷா,** சந்தவாசல், போளூர் வட்டம், திருவண்ணாமலை மாவட்டம்.

### மதுரை மாநகர் மாவட்டம்

**தலைவர் – எஸ்.முனைவர் உசேன்,** 4/1365 பாரதியார் தெரு, தாசில்தார் தெரு, அண்ணா நகர், மதுரை.

**துணைத் தலைவர் – எம்.சாதிக்பாஷா நன்னா,** 15, குப்புபிள்ளை தோப்பு 2 வது சந்து, தெற்கு வெளி வீதி, மதுரை- 625 001.

**அமைப்பாளர் – கே.ஏ.உஸ்மான் அலி,** 22, காயிதே மில்லத் நகர் 5 வது தெரு, கீழ்வெளி வீதி, மதுரை - 625 001.

**துணை அமைப்பாளர்கள் – எஸ்.முஜாஹித் உசேன்,** 66, காஜிமார் தெரு, 1 வது சந்து, மதுரை -1. **பி.பால் நாகராஜன்,** 150, காட்டுநாயக்கன் 4 வது தெரு, 2 பிட், சத்யமூர்த்தி நகர், பரவை, மதுரை. **ஏ.கைசர் உசேன்,** 29-ஏ.டி.பி.ரோடு மதுரை -1. **எம்.ஏ.கே.ஜாபர்சாதிக்,** நெ.08, பட்டரைக்காரத்தெரு, கோரிப்பாளையம், மதுரை. **எஸ்.பக்கீர் முகமது,** 10/1, பாலகிருஷ்ணமுதலியார் தெரு, பழங்காநத்தம், மதுரை. **ஏ.எம்.முகமது ரஃபி,** நெ.06, நாலாவது சந்து, பள்ளிவாசல் ரோடு, சுப்ரமணியபுரம், மதுரை-11. **என்.நாகூர்கனி,** 208, அண்ணாநகர், சொக்கிகுளம், மதுரை -625 002. **எம்.அன்வர்பாஷா,** 19, கொல்லம்பட்டரைத் தெரு, கீழவெளிவீதி, மதுரை-1.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை -18.
நாள்- 26.06.2023

**டாக்டர் அ.சுபேர்கான்**
செயலாளர்
தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு